Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., | ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 108 | புதன்கிழமை Wednesday | 18.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு ரூ. 22,090 கோடி ஒதுக்கீடு

## இடைக்கால பட்ஜெட்டில் அறிவிப்பு



மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2026–27 நிதியாண்டில் 11.15 சதவீதமாக அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட்டில்தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அடுத்த நிதியாண்டின் முடிவில் தமிழக அரசின் மொத்த கடன் 10.71 லட்சம் கோடி ரூபாயாக இருக்கும் என பட்ஜெட்டில் மதிப்பிடப்பட்டுள்ளது.

2026–27 நிதியாண்டுக்கான தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் சட்டமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்டது. தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, மொத்தம் 2 மணி நேரம் 22 நிமிடங்கள் தமது பட்ஜெட் உரையை வாசித்தார். அவரது உரையில் முக்கிய அம்சமாக மாநிலத்தின் சொந்த வரி வருவாய், ஒன்றிய லரிகளில் மாநில அரசின் பங்கு, ஒன்றிய அரசிடமிருந்து வரப்பெறக்கூடிய தொகைகளின் விகிதம் உள்ளிட்ட நிதி சார்ந்த பல்வேறு விஷயங்கள் இடம்பெற்றிருந்தன. அவற்றின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இடைக்கால பட்ஜெட்டில் 22,090 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

நடப்பாண்டிற்கான (2026 – 2027) இடைக்கால பட்ஜெட் அறிக்கையை இன்று காலை 9.30 மணியளவில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். பல துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் அடுத்தக்கட்ட மேம்பாடுக்கான அறிவிப்புகளை அவர் வெளியிட்டார். 2026–27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2,29,579 கோடி ரூபாயாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது, வணிக வரிகளின் கீழ் 1,62,417 கோடி ரூபாய், முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களின் கீழ் 31,881 கோடி ரூபாய், வாகனங்கள் மீதான வரிகளின் கீழ் 14,928 கோடி ரூபாய் மற்றும் மாநில ஆயத்தீர்வையின்கீழ் 13,668 கோடி ரூபாய் வரி வருவாய் மதிப்பீடுகளை உள்ளடக்கியதாகும்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதங்கள்சீரமைக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள எதிர்மறை விளைவு, பொருளாதார நடவடிக்கைகளில் முன்னேற்றம்,வரி வசூல் திறனில் முன்னேற்றம் ஆகிய பல்வேறு காரணிகளை கருத்திற்கொண்டு, மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2026–27 ஆம் ஆண்டில் 11.15 சதவீதமாக அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

2025–26 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 28,819 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய், திருத்த மதிப்பீடுகளில் 26,265 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவே 2026–27 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் 27,704 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக,2026–27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வருவாய் மதிப்பீடான 2,57,283 கோடி ரூபாய், மொத்த வருவாய் வரவுகளில் 74.67 சதவீதத்தைக் கொண்டிருக்கும்.

## ஜூலையில் இன்னும் பிரமாண்டமான பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் முதலமைச்சர் ஸ்டாலின் பேச்சு




2026 தேர்தலில் வெற்றி பெற்று, ஜூலை மாதம் இன்னும் பிரமாண்டமான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வோம் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் பிப்ரவரி முதல் மார்ச் மாதத்திற்கு இடைப்பட்ட காலத்தில், மாநில நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வரவுள்ளதால், திமுக அரசின் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

அதன்படி, காலை 9.30 மணிக்கு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்தார். அதைத் தொடர்ந்து, அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் இடைக்கால வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்தார். வழக்கம்போல் இந்த முறையும் காகிதம் இல்லாத பட்ஜெட்டாகவே தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், மாநில இடைக்கால பட்ஜெட் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவரது எக்ஸ் தள பக்கத்தில், "இதுதான் வளர்ச்சி! தமிழ்நாடு தான் இந்தியாவுக்கான மாடல்' என்று அனைவரும் பாராட்டும் ஐந்தாண்டு சாதனைகளின் தொகுப்பாக, இடைக்கால நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார் அமைச்சர் தங்கம் தென்னரசு. ஒன்றிய அரசின் ஓரவஞ்சனைகளை மீறி, அவர்களது வஞ்சகங்களைத் திறமையாககையாண்டு, வளர்ச்சியில் சாதனை படைத்திருக்கும் ஐந்தாண்டுகளை நிறைவு செய்கிறோம்.

ஜூலை மாதம் திராவிட மாடல் 2.0–வில் புதிய அறிவிப்புகளுடன் இன்னும் பிரம்மாண்டமான சாதனைகளுக்கு அடித்தளமிடும் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வோம். நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளில் சிலவற்றையும், ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்துவரும் ஓரவஞ்சனைகளில் சிலவற்றையும் உங்களின் பார்வைக்குபகிர்கிறேன்" என பதிவிட்டுள்ளார்.

## மேனா மினுக்கி பட்ஜெட்டுடன் திமுக ஆட்சிக்கு முடிவு கட்டப்படும்; எடப்பாடி பழனிசாமி கருத்து



சென்னை:

தமிழ்நாடு அரசின் இன்றைய மேனா மினுக்கி பட்ஜெட்டுடன் திமுக ஆட்சிக்கு முடிவு கட்டப்படும் என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி கூறினார்.

தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட்டை இன்று (பிப்.17) காலை 9.30 மணியளவில் சட்டப்பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். இதுகுறித்து பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு:

எடப்பாடி பழனிசாமி (பொதுச் செயலாளர், அதிமுக):

திமுக அரசு 2026–27 ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக தமிழக மக்களை வாட்டி வதைத்த திராவிட மாடல் என்ற பெயரால் நடத்தப்பட்ட ஏமாற்று மாடல் திமுகஅரசுதனது கடைசி பட்ஜெட்டை பேரவையில் தாக்கல் செய்துள்ளது. நாங்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாபெரும் காதுகுத்து விழா அழைப்பிதழை அனைத்து ஊடக நண்பர்களுக்கும் அளித்து இருக்கின்றோம். அதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். எந்த அளவுக்கு இந்த அரசு மக்களுக்கு காது குத்தியது என்பதை நாட்டு மக்களும் அறிய வேண்டும் என்பதற்காக இந்த அழைப்பிதழ் கொடுத்திருக்கிறோம். மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பது உங்கள் கடமை.

2021–ம் ஆண்டு திமுக சட்டமன்றத் தேர்தலின் போது 525 அறிவிப்புகளை வெளியிட்டார்கள். இதுவரை நான்கில் ஒரு அறிவிப்பை கூட நிறைவேற்றவில்லை. இன்றைக்கு அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை நிறைவேற்றுவோம் என கூறினார்கள். ஆனால் அதற்கு மாறாக பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்துள்ளார்கள். அரசு ஊழியர்களை இந்த அரசு ஏமாற்றிவிட்டது. மத்திய அரசு மீது குற்றம் சாட்டும் நிதியமைச்சர் மாநிலத்தின் சொந்த வருவாய் 26 ஆயிரம் கோடி குறைவு பற்றி எந்த விளக்கமும் சொல்லவில்லை. 2025–26–ம் ஆண்டு வரவு செலவு 66,753 கோடி செலவிடப்படும் என்று கணித்த நிலையில், திருத்திய மதிப்பீட்டில் 51,442 கோடியாக குறைந்துள்ளதற்கு நிதியமைச்சர் எந்த காரணமும் விளக்கவில்லை.

## தமிழக இடைக்கால வேளாண் பட்ஜெட் 2026: முக்கிய அம்சங்கள் என்னென்ன?





சென்னை:தமிழகஅரசின் 2026–27 இடைக்கால வேளாண் பட்ஜெட்டை (பிப்.17) சட்டப்பேரவையில் வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். இந்த உரையில் இடம்பெற்ற முக்கிய அம்சங்கள்:

> தென்னை விவசாயத்தை ஊக்குவிக்க 53 லட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. 21 லட்சம் பழச்செடிச் தொகுப்புகள் பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. > நெல் ஜெயராமன் மரபுசார் நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தில் 900 மெட்ரிக் டன் பாரம்பரிய நெல் விதைகள் உற்பத்திசெய்யப்பட்டு 70,000 விவசாயிகளுக்கு விநியோ கிக்கப்பட்டுள்ளன. > நெல் சாகுபடிப் பரப்பை அதிகரிக்க குறுவை சிறப்புத் தொகுப்பு திட்டம் ரூ.5.482 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு 19.51 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

> 2021–22 முதல் 2024–25 ஆம் ஆண்டு வரை, இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல் திட்டம் மூலம் 456 பட்டதாரி இளைஞர்கள் வேளாண் சார்ந்த தொழில் தொடங்க ஊக்குவிக்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.4.56 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

> தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் 2023–24–ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுத் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், இதுவரை 12.84 லட்சம் விவசாயிகள் ரூ.178 கோடி நிதியில்பயனடைந்துள்ளனர்.20இலட்சம்ஏக்கர் பரப்பளவில் சிறுதானியப் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. > தேசிய அளவில், தமிழ்நாடு கேழ்வரகு உற்பத்தித் திறனில் முதல் இடம், கேழ்வரகு உற்பத்தியில் இரண்டாம் இடம், குறுதானியங்கள் உற்பத்தியில் ஐந்தாம் இடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

> கம்பு சாகுபடிப் பரப்பு 113 லட்சம் ஏக்கரிலிருந்து 133 லட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது.

> வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 77,499 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் விவசாயி களுக்கு வழங்கப்பட்டன. 1,320 வேளாண் இயந்திர வாடகை மையங்களும் நிறுவப்பட்டன. இதற்கென மானியமாக மொத்தம் ரூ.783 கோடி வழங்கப்பட்டது.

>4,150 சூரிய சக்தி பம்புசெட்டுகள் நிறுவ ப்பட்டு ரூ.83 கோடி மானியம் விடுவிக்க ப்பட்டுள்ளது.

மேலும் 5,954 புதிய மின்மோட்டார் பம்புசெட்டுகளும் ரூ.7.67 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

## வங்கதேச பிரதமராக தாரிக் ரஹ்மான் பதவியேற்பு!



வங்கதேச தேசியவாத கட்சியின் தலைவரான தாரிக் ரஹ்மான், அந்நாட்டின் பிரதமராக பதவியேற்றார். அதிபர் முகம்மது ஷகாபுதின் அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

வங்கதேச நாடாளுமன்றத்துக்கு கடந்த 12–ம் தேதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் மொத்தமுள்ள 297 இடங்களில் 209 இடங்களை வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி) கைப்பற்றியது. மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிக இடங்களில் அக்கட்சி வெற்றி பெற்றதை அடுத்து,அதன் தலைவரான தாரிக் ரஹ்மான் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவராக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து இன்று அவர் பிரதமராக பதவியேற்றார்.

வங்கதேச நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் வங்கதேச அதிபர் முகம்மது ஷகாபுதின் அவருக்குப் பதிவிப் பிரமாணம் செய்து வைத்தார். தாரிக் ரஹ்மானுடன் 25 அமைச்சர்களும், 24 இணை அமைச்சர்களும் பதவியேற்றனர். அமைச்சர்களாக பதவியேற்ற 25 பேரில், தாரிக் ரஹ்மான் உட்பட 17 பேர் புதிதாக பதவியேற்றனர்.

பதவியேற்பு விழாவில் இந்தியா சார்பில் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, வெளியுறவுத் துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதற்காக டாக்கா சென்ற இந்திய குழுவினரை, வங்கதேச வெளியுறவுச் செயலாளர் நஸ்ரூல் இஸ்லாம் வரவேற்றார். இது ஒரு முக்கியமான தருணம் என குறிப்பிட்ட ஓம் பிர்லா, இரு நாட்டு மக்களுடனான உறவுகளை வலுப்படுத்தும் என்றார்.

மேலும், இந்தியாவும் வங்கதேசமும் ஜனநாயக விழுமிய ங்களை பகிர்ந்து கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டார். தாரிக் ரஹ்மான் வெற்றி பெற்றதை அடுத்து அவரை முதலில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்த தலைவர்களில் பிரதமர் மோடியும் ஒருவர். அப்போது, பதவியேற்புக்குப் பிறகு சவுகரியமான ஒரு தருணத்தில் இந்தியாவுக்கு வருமாறு தாரிக் ரஹ்மானுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். இதன் தொடர்ச்சியாக, தாரிக் ரஹ்மானின் பதவியேற்பு விழாவில் பங்கேற்க பிரதமர் மோடிக்கு வங்கதேச அரசு சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும், இந்தியாவில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரோனுடன் பிரதமர் மோடி இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்த உள்ளதால் அவருக்குப் பதிலாக ஓம் பிர்லாவை அனுப்பி வைத்தார்.

பதவியேற்பு விழாவை முன்னிட்டு அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. காவல்துறை, அதிபருக்கான காவல் படை, எஸ்எஸ்எஃப் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில்**

**இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# பெரியகுளம் கைலாசநாதர் மலை கோயிலில் மகா சிவராத்திரி விழா







தேனி மாவட்டம் பெரியகுளம் கைலாசபட்டி அருகில் உள்ள கைலாசநாதர் மலைக்கோயிலில் 15/02/2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி முதல் அதிகாலை 5.30 மணிவரை மகாசிவராத்திரி நான்கு கால பூஜை வழிபாடு நடைபெற்றது. முதல் கால பூஜை இரவு10 மணி இரண்டாம் கால பூஜை இரவு 12 மணி மூன்றாம் கால பூஜை இரவு 2மணி நான்காம் கால பூஜை பிரம்மமுகூர்த்தம்பூஜை 4 நான்கு மணியளவில் துவங்கி அதிகாலை 5.30 மணி வரை நடைபெற்றது. முதல் காலம் சிறப்பு அபிஷேகம் பூஜையில் முன்னால் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தரிசனம் செய்து வழிபட்டார் மகாசிவராத்திரி இந்த இனிய சிவராத்திரியில், விடிய, விடிய, கூட்டு வழிபாட்டுடன் தேவாரம், திருவாசகம், கூட்டு வழிபாட்டுடன் பாடி இறைவனை போற்றி பக்தர்கள் வழிபட்டார்கள் உலக நன்மைக்காகவும் சிறப்பு வழிபாடும் நடைபெற்றது ஆயிரத்திற்கும் மேலான பக்தர்கள் கலந்து கொண்டனர். மாலை 6 மணியளவில் அன்னதானத்தையும், ஒவ்வொரு கால பூஜைகள் முடிந்தவுடன் அன்ன பிரசாதத்தையும் தேனி அரசு ஒப்பந்தகாரர் M.வீரராஜ் தாமாரை குளம் முன்னால் சேர்மன் M.ராம தண்ட பாணியும் வழங்கினார்கள் குழுவின் சார்பாக ஐந்து முகம் ருத்ராட்சம் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை அன்பர் பணி செய்யும் ப ர ா ம ரி ப் பு குழுவினர்கள் செய்திருந்தனர்.



# பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இந்திய வேளாண் ஆராய்ச்சி குடும்பத்தின் குளிர்கால பள்ளி பயிற்சி

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் உள்ள தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இந்திய வேளாண் ஆராய்ச்சி குடும்பத்தின் (ICAR) 21 நாட்கள் குளிர் கால பள்ளி நடைபெற்றது. இது ICAR நிதி உதவி உடன் (6.56..லட்சம் நடத்தப்பட்டது இக்கல்லூரியில் இயற்கை வள மேலாண்மை துறை தலைவர் பேராசிரியர் முனிவர் G. J.ஜானவி இப்பள்ளிக்கு பயிற்சி இயக்குனராக இருந்து நடத்தினார். தோட்டக்கலை பயிர்கள் விலை பொருள்களின் வாழ்நாளை அதிகரிக்ககூடிய மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை பயிற்றுவித்தல் இப்பள்ளியின் கருப்பொருள் ஆகும். இந்தப் பயிற்சியில் சிக்கிம், மகாராஷ்டிரா, ஒடிசா, ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இருந்து விஞ்ஞானிகள் இப்ப பயிற்சி பள்ளியில் பங்கேற்றனர். இப்பயிற்சி தொடக்க விழாவில் பேராசிரியர் ஜி ஜோ.ஜானவி அனைவரையும் வரவேற்று தொடக்க விழா துறை தலைவர் வாழ்த்துரை வழங்கினார். இப்பள்ளி தொடக்க விழா சிறப்பு விருந்தினராக கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள CSiR –nllst தேசிய பல்துறை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு நிலையத்தின் இயக்குனர் முனிவர் சி.ஆனந்தராமகிருஷ்ணன் இந்திய ஜனாதிபதிடமிருந்து 2024 ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய அறிவியல் விருது ஆன ராஷ்டிய விஞ்ஞான சி புரஸ்கார் பெற்றவர். தலைமை உரை கல்லூரி முதல்வர் முனிவர் எஸ் சரஸ்வதி இப்பயிற்சி பள்ளி அறுவடைக்குப் பின்னர் இழப்புக்களை குறைப்பதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதை வலியுறுத்தி உரையாற்றினார். இந்த குளிர்கால பயிற்சி பள்ளியின் நிறைவு விழாவினை 21 நாட்கள்.. குளிர்கால பள்ளி கல்லூரியில் முதல் முறை நடத்தப்பட்டதாக பெருமையுடன் தெரிவித்து பாராட்டி இதற்கு நிதி உதவி அளித்த ஐசிஏஆர்க்கு தனது நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். விழா சிறப்பு விருந்தினர் உதவ இயக்குனர் ஜெனரல் முனிவர் சீமா ஜக்கி இணைய வழிகள் இணைந்து குளிர்கால பள்ளியில் பங்கேற்ற அனைத்து விஞ்ஞானிகளையும் பாராட்டி அவர்களை கருத்து கேட்டறிந்தார்.. மேலும் மேம்படுத்தப்பட்ட மேலாண்மை உத்திகளை கண்கூடாக தேனி திண்டுக்கல் மதுரை திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள உணவு பாதுகாப்பு மற்றும் பதப்படுத்துதல் நிலையங்களில் பார்த்து கற்றுக் கொண்டதால் பங்கேற்ற விஞ்ஞானிகள் கல்லூரியில் உள்ள மாணவர்களுக்கு விளக்கி கூறி பாடம் கற்பிக்க எளிதாக இருக்கும் என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

இந்த நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் முனிவர் ஆர் பியுலா பேராசிரியர்.. & மற்றும் தலைவர் அறுவடைக்கு பின்னர் தொழில்நுட்பத் துறை நன்றி உரை வழங்கினார்.

# எம்.செட்டிபட்டியில் பேருந்து இல்லாததால் தேர்வின்போது சரியான நேரத்தில் பள்ளிக்கு செல்ல முடியவில்லை என மாணவர்கள் வேதனை



சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் M.செட்டிபட்டி கிராமத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. இந்த வழித்தடங்களில் போதுமான பேருந்து வசதி இல்லாததால் பள்ளி மாணவ, மாணவிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். சுமார் 500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் வேடப்பட்டி, பெரியேரிப்பட்டி ,செட்டிபட்டி பிரிவு போன்ற பகுதிகளில் இருந்து பள்ளிக்கு வந்து செல்கிறார்கள். பள்ளி மாணவர்களின் நலன் கருதி இந்த வழித்தடங்களில் கூடுதலான பேருந்துகள் இயக்கவழிவகைசெய்துதர வேண்டும். பேருந்துகள் குறிப்பிட்ட சரியான நேரத்தில் இல்லாததால் பள்ளி மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு பள்ளிக்கு தேர்வு நேரங்களில் செல்ல முடியவில்லை இதனால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இது சம்மந்தமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பலமுறை மனு கொடுக்கப்பட்டு எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. பள்ளி மாணவர்களின் நலன் கருதி வேடப்பட்டி TO ஓமலூர் செல்வதற்கு கூடுதலாக பேருந்துகள் இயக்க வேண்டும் என்பது சமூக ஆர்வலர் K.சசிகுமார் மற்றும் அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது.

## வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில்

# மஞ்சள் அறுவடை இயந்திரம் மணிக்கு ரூ.460/ வீதம் வாடகைக்கு விடப்படவுள்ளது.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் அறுவடை பணிகளை குறித்த காலத்தே செய்து முடிக்க அதிக நேரமும் அதிக அளவில் வேலையாட்களும் தேவைப்படுகிறது. கால விரையத்தை தவிர்க்கவும் வேலையாட்கள் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யவும், வேளாண்மைப் பொறியியல் துறையில் மஞ்சள் தோண்டும் இயந்திரம் மணிக்கு ரூ.460/- வீதம் வாடகைக்கு விடப்படுகிறது. மஞ்சள் தோண்டும் இயந்திரமானது மினி டிராக்டருன் பயன்படுத்தும் வகையில் உள்ளதால் சிறிய வயல்களில் கூட எளிதாக மஞ்சள் தோண்டும் வகையிலும், சேதாரமின்றி மஞ்சளை அறுவடை செய்யும் விதமாகவும் உள்ளதால், மஞ்சள் தோண்டும் பணிக்கான வேலையாட்கள் தேவையை பெருமளவில் குறைப்பதுடன் குறித்த நேரத்தில் அறுவடைப் பணிகளை மேற்கொள்ள உதவுகிறது. மஞ்சள் தோண்டும் இயந்திரம் (Turmeric Digger) ஈரோடு உபகோட்டத்தில் 3 எண்களும் கோபி உபகோட்டத்தில் 3 எண்களும் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் வாடகைக்கு விடப்படுகிறது. மேற்படி இயந்திரங்களை விவசாயிகள் இ-வாடகை ஆன்லைன் செயலியில் முன்பதிவு செய்து பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது தொடர்பான மேலும் விபரங்களை அறிய உதவிசெயற்பொறியாளர் (வே.பொ), ஈரோடு அலுவலக தொலைபேசி எண். 0424-2904843, அலைபேசி எண். 9894183367 மற்றும் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) கோபிசெட்டிபாளையம் அலுவலக தொலைபேசி எண். 04285-290069, அலைபேசி எண். 9443547484 ஆகியவற்றை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.



# போச்சம்பள்ளியில் வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை தேங்காய் கொள்முதல் துவக்கம்

## 11 டன் கொப்பரை தேங்காய் விற்பனைக்கு வந்தது

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில், கிருஷ்ணகிரி வட்ட வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோரும் திங்கட்கிழமை கொப்பரை ஏலம் விடப்படுகிறது. இன்று நடைபெற்ற ஏலத்தில் போச்சம்பள்ளி அதன் சுற்று வட்டார கிராமங்களில் இருந்து தென்னை விவசாயிகள் கொப்பரை தேங்காய் 11 டன் அளவிற்கு விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் கேரளா, சேலம், வெள்ளக்கோவில் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளிலிருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்ய வந்திருந்தனர்.

நடைபெற்ற ஏலத்தில் கிலோ ரூ.90 முதல் ரூ.195 வரை ஏலம் போனது. இதில் வேளாண் துணை பதிவாளர் மற்றும் மேலாண்மை இயக்குனர் பெரியசாமி, பொது மேலாளர் பொறுப்பு இதயவர்மன், தலைமை பொறுப்பாளர் இளவரசன் ஆகியோர் இருந்தனர்.

# தென்காசி காட்டுபாவா நடுநிலைப்பள்ளியில் தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு அறிவியல் கண்காட்சி







தென்காசி மாவட்டம் தென்காசி நகர் பகுதியில் அமைந்துள்ள காட்டுபாவா

நடுநிலைப் பள்ளியில் தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு அறிவியல் கன்காட்சி நடைபெற்றது.

இக் கண்காட்சிக்கு பள்ளியின் நிர்வாகி. அப்துர் ரஹ்மான் தலைமை தாங்கினார்.

பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர். ஹாஜி.

வி.டி.எஸ்.ஆர்.முகம்மது இஸ்மாயில் முன்னிலை வகித்தார். முன்னாள் தலைமை ஆசிரியர் முகம்மது இஸ்மாயில் கண்காட்சியின் நோக்கம் குறித்து எடுத்துக் கூறினார். தலைமை ஆசிரியர் பாத்திமா ஹீசைனா வரவேற்றார். தென்காசி வட்டாரக் கல்வி அலுவலர் வசந்தி கண்காட்சியை ரிப்பன் வெட்டி துவக்கி வைத்து பார்வையிட்டு மாணவர்களை வாழ்த்தினார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் நல்லாசிரியர் சுரேஷ் குமார்

மந்திரமா ? தந்திரமா ?செய்து காட்டினார். தாமிரபரணி கலைக்குழு மதியழகன் அறிவியல் பாட்டு, கதைகள், நாடகம் போன்ற நிகழ்வுகளைச் செய்து காட்டி சுற்றுச் சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தொழிலதிபர். ஹாஜி. V.T.S.R. முகம்மது இஸ்மாயில் 175 மாணவர்களுக்கும் பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தினார். நிறைவாக அறிவியல் ஆசிரியர் சேக் ஒலி வாவா நன்றி கூறினார். மாணவர்களை அறிவியல் ஆசிரியர் ஆமினா பேகம் சிறந்த முறையில் தயார் செய்து இருந்தார். மாணவர்கள் 75 படைப்புக்களை செய்து காண்பித்தனர். ஆங்கில ஆசிரியை ஆமினா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

# அரிமண்டபம் கிராமத்தில் கடந்த ஒரு மாதமாக குடிநீர் பிரச்சனை உள்ளதால் கிராம பொதுமக்கள் கடும் அவதி



சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், அரிமண்டபம் கிராமத்தில் கடந்த ஒரு மாத கால குடிநீர் பிரச்சனை உள்ளதாகவும், இதன் காரணமாக கிராம பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருவதாக தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் மானாமதுரை ஒன்றிய இணை செயலாளர் கரு. பகத்சிங் மற்றும் பொதுமக்கள் குற்றம்சாட்டினர். தொடர்ச்சியாக மற்றும் சரியான முறையில் குடிநீர் வருவதில்லை எனவும், குடிநீரால் நோய்த்தொற்று கிருமிகளுக்கு பரவிபள்ளிகுழந்தைகள், முதியவர்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகி வருவதாக அக்கிராம மக்கள் தங்கள் வேதனையை தெரிவித்தனர். எனவே உடனடியாக மாவட்ட ஆட்சியர், மாவட்ட நிர்வாகம், உள்ளாட்சி நிர்வாகம் தலையிட்டு குடிநீர் பிரச்சினையை போக்கிட தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் சார்பாகவும், கிராம பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டோர் சார்பாகவும் தமிழக அரசு கவனம் செலுத்திட வலியுறுத்தினர்.

# மன்னார் கோவில் பகுதியில் கிரியோயிட் அறக்கட்டளை நெல்லை கேன்சர் சென்டர் இணைந்து நடத்திய புற்றுநோய் கண்டறியும் முகாம்



தூத்துக்குடி வ.உ .சிதம்பரனார் துறைமுக ஆணையம் கிரியோயிட் அறக்கட்டளை நெல்லை கேன்சர் சென்டர் இணைந்து திருநெல்வேலி மாவட்டம் மன்னார் கோவில் பகுதியில் புற்றுநோய் கண்டறியும் முகாம். அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஆர் , சிவனுப்பாண்டியன் (எ) பரணி சேகர் தலைமையில் மிக சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் கிரியோயிட் அறக்கட்டளை அறங்காவலர் பாத்திமா அமீர்கான் வரவேற்றார். அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் மாரியம்மாள் சண்டுக்குட்டி , மன்னார் கோவில் ஊராட்சி மன்ற தலைவர் ஜோதி கல்பனா ஆகியோர் முன்னிலைவகித்தனர். புற்று நோய் கண்டறியும் முகாமினை முன்னாள் திருநெல்வேலி பாராளுமன்ற உப்பினர் எஸ்.எஸ். ராமசுப்பு துவக்கிவை த்தார். கிரியோயிட் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டாக்டர் அமீர்கான் திட்ட விளக்க உரையாற்றினார், இந்நிகழ்ச்சியில் முஸ்தபா ரியாஸ் கான் , சமூக ஆர்வலர் பூதத்தான் , வாகைகுளம் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் கஸ்தூரி வாகைகுளம் ஊராட்சி மன்ற தலைவர் சுப்புலட்சுமி நந்தகுமார் , மன்னார் கோவில் அரசு உயர் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சேவியர், கிரியோயிட் அறங்கட்டளை செயலாளர் நஜிமுதீன் , அம்பை சம்சுதீன், மன்னார் கோவில் ஊராட்சி துணைத்தலைவர் நிர்மலா சங்கர், மன்னார் கோவில் ஊராட்சி செயலாளர் தங்க பிரசன்னா, , முஸ்தபா, ரியாஸ் கான், , அம்பை ஆசிக் ஆகியோர் வாழ்த்தி பேசினர். இம் முகாமின் ஒருங்கிணைப்பாளர் சண்முக குட்டி நன்றி கூறினார். டாக்டர் அபிராமி தலைமையிலான குழுவினர் தங்கம்மாள் , சக்தி , முத்துலட்சுமி , சத்யா, கார்திக் அடங்கிய மருத்துவக்குழு புற்று நோய் கண்டறியும் பரிசோதனை செய்தது குறிபிடத்தக்கது.

# ஆலங்குளத்தில் நெல் கொள்முதல் செய்யும் வகையில் நெல் கொள்முதல் இயந்திரத்தை தொடங்கி வைக்கும் விழா நடைபெற்றது



ஆலங்குளத்தில் நெல் கொள்முதல் செய்யும் வகையில் நெல் கொள்முதல் இயந்திரத்தை தொடங்கி வைக்கும் விழா நடைபெற்றது

நிகழ்ச்சிக்கு ஆலங்குளம் பேரூர் கழகச் செயலாளர் நெல்சன் அவர்கள்தலைமைதாங்கினார் காங்கிரஸ் நகரதலைவர் வில்லியம் தாமஸ் மதிமுக பேரூர் கழக செயலாளர் கண்ணன் ஆலங்குளம் அறிவு திருக்கோவில் நிர்வாகி ஆதித்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

வருகை தந்த அனைவரையும் முன்னாள் ஆலங்குளம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் தங்க செல்வம் அவர்கள் வரவேற்று பேசினார்கள்

நெல் கொள்முதல் இயந்திரத்தை முன்னாள் மாவட்ட கழக செயலாளர்சிவ பத்மநாதன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். ஆலங்குளம் பகுதியை சுற்றி நிறைய விவசாய நிலங்கள் இருக்கிறது ஒருபோகம் நெல் விளையும் ஆனால் ஆலங்குளத்தை சுற்றி இருக்கிற கிராமங்களில் நெல் கொள் முதல் செய்வதற்கு இயந்திரங்கள் வழங்கப்பட்டு வந்தது ஆலங்குளத்திற்கு கடந்த ஆண்டுதான் முதன் முதலாக கொள்முதல் செய்யும் நிலையம் ஏற்படுத்தப்பட்டது கடந்த ஆண்டு இதன் மூலம் நிறைய விவசாயி கள் பயனடைந்து உள்ளார்கள் மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பொன்னரசு அரிமா துணை ஆளுநர் டாக்டர் கே பி ஜான்ஸ் பேரூர் பொருளாளர் சுதந்திரராஜன் காங்கிரஸ் வழக்கறிஞர் பால்ராஜ் மகளிர் அணி பாஸ்கர் சரஸ்வதி பாஸ்கர் வார்டு செயலாளர் கள் ஆட்டோ ஜோசப் / ரவி , தொழிலதிபர் ஜி எஸ் செல்வம் மாவட்ட பிரதிநிதி அன்பழகன் நெப்போலியன் ஸ்டீபன் சத்யராஜ் துரைப்பாண்டியன், சோனா மகேஷ், ஒன்றிய கவுன்சிலர்கள் சங்கர் நாகராஜ் பேரூராட்சி கவுன்சிலர் லிங்கவேல் ராஜா வழக்கறிஞர் கருப்பு சித்தன் லிவிங்ஸ்டன் விமல் ஆறுமுகராஜ் ஐசக் கிளைக் கழகச் செயலாளர் சிவசக்தி சேர்மலிங்கம் காசி பாண்டியன் செல்வராஜ் வியாபாரிகள் சங்கத் தலைவர் சந்திரன் இளைஞரணி ஹரிகிருஷ்ணன் ,பிரபாகரன் , உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் முடிவில் மாவட்ட பிரதி அன்பழகன் நன்றி கூறினார்



ஈரோடு மாவட்டம் பவானி கூடுதுறையில் உள்ள அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயிலில் மகாசிவராத்திரியை முன்னிட்டு கோயில் நிர்வாகம் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆன்மீக சொற்பொழிவு, பக்தி இசை, பரதம் ஆகிய நிகழ்ச்சிகளை சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் மயிலால் ரூபாவதி விக்னேஷ் நாட்டிய பள்ளியில் பயின்ற மாணவிகளின் பரதநாட்டிய நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்று பக்தர்கள், பொதுமக்கள் கண்டு ரசித்து மாணவிகளை பாராட்டினர். மகாசிவராத்திரி பெருவிழாவை முன்னிட்டு விடிய விடிய பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் காணொளி காட்சி வாயிலாக பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிய முதலமைச்சர் ஸ்டாலின்





சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம் தாயமங்கலம் கிராமத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி வாயிலாக,பொது மற்றும் மறுவாழ்வுத் துறையின் சார்பில், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் 52 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் வழங்கும் திறப்பு விழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரியகருப்பன் கலந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து மானாமதுரையில் அரசு கலைகல்லூரிக்கு 16 கோடியில் புதிய கட்டிடம் கட்டுவதற்க்கான பூமி பூஜை விழாவினை மாண்புமிகுதமிழகமுதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்குவிழாவில்கலந்து கொண்ட குத்துவிளக்கேற்றிய அமைச்சர், தொடர்ச்சியாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழாவை தொடங்கி வைத்து விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். மேலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் மகளிர் விடியல் பயண நகரப் பேருந்துகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதில் மாவட்டத் துணைச் செயலாளர் சேங்கைமாறன், சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, நகர கழகச் செயலாளர் பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் அரவிந்த், வருவாய் கோட்டாட்சியர் கிரேசியா, செயற்பொறியாளர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இந்துமதி, இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் தாசில்தார் ஜெயந்தி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன்,தமிழ்மாறன்,வெங்கட்ராமன், இளையான்குடி பேரூராட்சி செயலாளர் நஜிமுதீன், மானாமதுரை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ராஜாமணி, வடக்கு ஒன்றிய கழக செயலாளர் முத்துச்சாமி, திருப்புவனம் கிழக்கு ஒன்றிய கழகச்செயலாளர்எம்.ஏ. கடம்பசாமி,அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மானாமதுரையில் திமுக பரப்புரை பொதுக்கூட்டம் அமைச்சர் பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி அலுவலகம் எதிர்ப்புறம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் திமுக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு தலை குனியாது என்கின்ற திமுக பரப்புரை பொதுக்கூட்டம் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கே. ஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையிலும் முன்னாள் அமைச்சர் மாநில மகளிர் தொண்டரணி இணை செயலாளர் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசு ரவிக்குமார் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நகர மன்ற தலைவர் மாநில ஆதி திராவிடர் நலக்குழு துணை செயலாளர் மாரியப்பன் கென்னடி ஆகியோர் முன்னி லையிலும் நடைபெற்றது. இதில் நகர கழக செயலாளர் பொன்னுசாமி, ஒன்றிய செயலாளர்கள் ராஜாமணி, அண்ணாதுரை, முத்துசாமி ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார். சிறப்புரையினை முன்னாள் அமைச்சர் உயர்நிலைசெயல்நிலைதிட்ட குழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம் ஆற்றினார். இந்நிகழ்வில் திராவிட முன்னேற்ற கழகத்தின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, வட்ட, பேரூர், ஊராட்சி, கிளை மற்றும் சார்பு அணிகளை சேர்ந்த நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தொண்டர்கள் நூற்றுக் கணக்கானோர் திரளாக கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பாரதி போட்டித்தேர்வு பயிற்சி மையத்தினை துவக்கி வைத்தார்



ஈரோடு, மாநகராட்சி கருங்கல்பாளையம், காமராஜர் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி அருகிலுள்ள இளைஞர் மேம்பாட்டு மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பாரதி போட்டித்தேர்வு பயிற்சி மையத்தினை துவக்கி வைத்தார்.மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும்போது தெரிவித்ததாவது, மாணவர்களாகிய நீங்கள் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று சமூகம் உங்களுக்கு கொடுப்பதை திருப்பி கொடுக்க வேண்டும். போட்டித் தேர்வுகளின் முறை அதற்கு தயார் செய்ய வேண்டிய உத்திகள் ஆகியவற்றை தெரிந்து கொண்டால் அதிக பட்சமாக ஓராண்டில் வெற்றி பெற்று வேலைக்கு சென்று விட முடியும். இலட்சக்கணக்கானவர்கள் போட்டித் தேர்வுக்கு விண்ணப்பம் செய்கிறார்கள். ஆனால் அதில் ஒரு முப்பது விழுக்காடு மாணவர்களே பயிற்சி பெறுகின்றனர். மீதமுள்ளவர்கள் பார்வையாளர்கள் போல் வந்து செல்கின்றனர். பங்கேற்பாளர்களுக்கே வெற்றி கிடைக்கும்.எந்தப்பயிற்சி மையம்எவ்வளவுபயிற்சி கொடுத்தாலும் நாம் தான் முயற்சி செய்து எழுதவேண்டும்.வாய்ப்புகளை உரிய காலத்தில் பயன்படுத்த வேண்டும். இங்கு இளைஞர்கள் எடுக்கும் முயற்சிகள் பாராட்டத்தக்கது. கவுண்டச்சிபாளையத்தில் ஒரு சிற்றூரில் 15 பேர் அரசுப் பணியில் சேர்ந்து உள்ளனர்.

மாணவ, மாணவியர்கள் திட்டமிட்டு படிக்க வேண்டும். ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு நூல்களில் படிப்பவர்களை இணைய வழியில் இணைத்து ஓர் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் சுமார் 500-க்கும் மேற்பட்டவர்கள் பங்கு பெற்று ஆர்வத்துடன் படிக்கிறார்கள். 75 விழுக்காடு மதிப்பெண்கள் எடுப்பவர்கள் கொஞ்சம் முயற்சி எடுத்து திட்டமிட்டு படித்தால் எளிதில் வெற்றி பெறலாம். இந்த மையத்திலிருந்து ஏராளமானவர்கள் வெற்றி பெற்று பணியில் சேர்கிறார்கள் என்ற செய்தி என் காதுகளுக்கு விரைவில் எட்ட வேண்டும் எனது கனவாகும். இப்பயிற்சியை முன் நின்று நடத்தும் பாரதி போட்டித் தேர்வு பயிற்சி மைய உறுப்பினர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் பாராட்டுக்கள் என தெரிவித்தார்.

பாரதி போட்டித் தேர்வு பயிற்சியாளர்கள் உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்டோர்கலந்துகொண்டனர். இந்த பயிற்சி மையத்தில் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு விடுமுறை நாட்களில் வகுப்புகள் நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், 2- ம் மண்டல குழுத்தலைவர் சுப்பிரமணியம், பாரதி பயிற்சி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் பிரபு,37- வார்டு உறுப்பினர் தீபலட்சுமி அண்ணாதுரை, பயிற்சி உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்

# போதைப்பொருள் மற்றும் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்களின் பரவலை தடுக்க பள்ளி, கல்லூரி ஒருங்கிணைப்பாளர்களுடன் கூட்டம் நடைபெற்றது

ஈரோடு, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (16.02.2026) போதைப்பொருள் மற்றும் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்களின் பரவலை தடுக்க பள்ளி, கல்லுரி ஒருங்கிணைப்பாளர்களுக்குடனான கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

பள்ளி கல்லூரிகள் அருகில் 49 இனங்களுக்கு முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு 30 குண்டாஸ் வழக்குகள் பதியப்பட்டுள்ளது. 18 போதைப்பொருள் பயன்படுத்தும் கடைகள் மீது சீலிடப்பட்டுள்ளது. எனவே அனைத்துப் பள்ளி கல்லூரிகளிலும் போதை இல்லாத தமிழ்நாடு செயலியை (Drug Free Tamilnadu App download) அனைவரும் பதிவிறக்கம் செய்ய வேண்டும். பள்ளி அருகில் உள்ள ஒருங்கிணைப்பாளர்கள் கண்காணிக்க வேண்டும் என கடைகளையும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், உதவி இயக்குநர் (கலால்) தியாகராஜன், உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் வரலட்சுமி, மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் (மதுவிலக்கு மற்றும் அமலாக்க பிரிவு) சுகுமார், பள்ளி,கல்லூரிஒருங்கிணைப்பாளர்கள், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# அச்சிறுப்பாக்கம் அருகே ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி ஆலய மயான கொள்ளை விழா



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகே திருமுக்காடு கிராமத்தில் மகா சிவராத்திரி மாசி மாத அமாவாசை அன்று நடைபெறும் ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி ஆலய எட்டாம் ஆண்டு மயான கொள்ளை திருவிழா நடைபெற்றது விழாவில் விரதம் இருந்து பக்தர்கள் காளிவேடம் பல்வேறு சாமி வேடம் அணிந்து கொண்டு மேல தாளங்கள் முழுங்க நடனம் ஆடிக்கொண்டு பக்தர்கள் அப்பகுதி இது உள்ள மயானத்தில் விவசாயிகள் அவர்கள் விளைவித்த காய்கறிகளை மயானத்தில் வாரியரைத்து மயான கொள்ளை விட்டனர் இந்த நிகழ்ச்சிகள் சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஆயிரக்கணக் கூற கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இந்த மயான கொள்ளை விழாவில் சிறப்பு அழைப்பாளராக மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல், மதுராந்தகம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ரங்கராஜன், மாவட்ட பிரதிநிதி சித்தப்பா கிருஷ்ணன், காஞ்சிபுரம் தேமுதிக மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் எம். ராஜேந்திரன், மற்றும் கட்சி நிர்வாகி கள் உடன் ஏராளமானோர்கலந்துகொண்டனர்.

## தமிழக அரசால் தடை செய்யப்பட்ட

## குட்கா, ஹான்ஸ், கூல் லிப் உள்ளிட்ட புகையிலைப்பொருட்களை

## பள்ளி, கல்லூரி அருகாமையில் உள்ள கடைகளில் வைத்திருந்தால் கடும் நடவடிக்கை



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு-

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா, ஹான்ஸ்,கூல்லிப் உள்ளிட்ட புகையிலைப்பொருட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் காவல்துறை, உணவு பாதுகாப்புத்துறை, உள்ளாட்சித்துறை, சுகாதாரத்துறை, கல்வித்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பள்ளி, கல்லூரி அருகாமையில் உள்ள கடைகளில் தீவிர ஆய்வு மேற்கொண்டு இத்தடையினை மீறி விற்பனையில் ஈடுபடும் கடைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டு கடை மூடி வைக்கப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் ஜனவரி-2025 முதல் டிசம்பர்-2025 வரை தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை ப்பொருட்கள் விற்பனை செய்த 943 கடைகள் மூடி வைக்கப்பட்டு ரூ.2,57,25,000/- (இரண்டு கோடியே ஐம்பத்து ஏழு லட்சத்து இருபத்து ஐந்தாயிரம்) அபராதம் விதிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. இதில் 4,783 கிலோ புகையிலை ப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு மாவட்ட அளவிலான அழிப்புக்குழு முன்னிலையில் மாநகராட்சி குப்பைக் கிடங்கில் அழிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நீதிமன்றம் சாலை சத்தியமங்கலத்தில் உள்ள ஹனிபா பெட்டிக் கடையில் தமிழக அரசின் தடையை மீறி நான்காவது முறை புகையிலைப்பொருட்கள் விற்பனை செய்த குற்றத்திற்கு ஈரோடு மாவட்ட நியமன அலுவலர் தலைமையில் மாநகராட்சி உணவு பாதுகாப்பு அலுவலர்கள் கொண்ட குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் 1.25 கிலோ பறிமுதல் செய்து, வணிகத்தை தடை செய்ய நியமன அலுவலரால் ஆணை பிறப்பிக்க ப்பட்டது. மேலும் உள்ளாட்சித் துறையினரால் வழங்கப்பட்ட தொழில் உரிமம் ரத்து செய்யப்பட்டது. 4-ம் முறை குற்றத்திற்காக கடை உரிமையாளர் மீது மாவட்ட தீர்ப்பு வழங்கும் அலுவலக நீதிம ன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்படுகிறது. ஏற்கனவே ஈரோடு மாநகராட்சி பகுதியில் தொடர் குற்றத்திற்கு ரூ.1.9 லட்சம் அபராதம் விதிக்க ப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆய்வின்போது சுகாதாரத்துறை அலுவலர், மாநகராட்சி ஆய்வாளர் மற்றும் காவல்துறையினர் உடனிருந்தனர். காவல்துறை, உள்ளாட்சித்துறை, சுகாதாரத்துறை, கல்வித்துறை ஆகிய துறையினருடன் ஒருங்கிணைந்து கடைகள், பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகாமையில் உள்ள உணவு வணிக நிறுவனங்களில், தீவிரமாக சோதனைகளில் ஈடுபட்டு வருவதுடன் வாகனங்களில் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் பொதுமக்கள் தடைசெய்யப்பட்ட புகையிலை மற்றும் நிகோட்டின் கலந்த உணவுப்பொருட்களை விற்பனை செய்வது குறித்து புகார்களை 0424 2223545 9444042322 என்ற வாட்ஸ் அப் எண்ணிற்கும் தொடர்பு கொள்ளலாம். அவ்வாறு புகார் அளிக்கும் நுகர்வோர்களின் விபரம் ரகசியமாக வைக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.





தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு துணைமுதலமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க , தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் பெரியார் வீதியில் அமைந்துள்ள அரசு தொடக்கப் பள்ளியில் இரண்டு "SMART CLASS" வகுப்பறைகள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 4 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகளை ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியர், ஆசிரியைகள், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (16.02.2026) அன்று அதிக எண்ணிக்கையில் வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வீரப்பன்சத்திரம், மாநகராட்சி தொடக்கப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் ஆய்வுமேற்கொண்டார். உடன் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் உட்பட பலர் உள்ளனர்.

## தென்னிந்திய பரம்பரை ஜோதிடர் நலச் சங்கம் சார்பில் முதல் ஜோதிட மாநாடு; நடிகர் கே.பாக்யராஜ் பங்கேற்பு

### மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன




தென்னிந்திய பரம்பரை ஜோதிடர்கள் நலச் சங்கம் சார்பில் முதல் ஜோதிட மாநாடு நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் திரைப்பட நடிகர் மற்றும் இயக்குனர் கே பாக்யராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். மாநாட்டில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜோதிடர்கள் பங்கேற்றனர். இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் தென்னிந்திய பரம்பரை ஜோதிடர் நலச் சங்கத்தின் முதல் ஜோதிட மாநாடு விமர்சையாக நடைபெற்றது. தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டிற்கு தென்னிந்திய தலைவர் துடியலூர் ஸ்ரீ ருத்ர மணிகண்டன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்தனர்.

மாநாட்டிற்கு தென்னிந்திய சபைத் தலைவர் தஞ்சாவூர் குமார், தென்னிந்திய கவுரவ அவைத்தலைவர் வடுகப்பட்டி இளங்கோவன், தென்னிந்திய கவுரவத் தலைவர் தஞ்சாவூர் கணேசன், தென்னிந்திய செயலாளர் பெரியநாயக்கன்பாளையம் ஸ்ரீசாய் சசிகுமார், தென்னிந்திய பொருளாளர் துடியலூர் பாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த மாநாட்டிற்கு திரைப்பட நடிகர் மற்றும் இயக்குனர் கே பாக்யராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் பேசும்போதும் ஜோதிடம் எப்போதுமே பொய்யாகாது, ஜோதிடர்கள் கணிக்கும்போது சில நேரங்களில் தவறுகள் நடக்கலாம், ஜோதிடம் என்பது பாதுகாப்பு போன்றது, ஜோதிட சங்கத்திற்கு நல வாரியம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கையும் வைத்தார். மாநாட்டில் ஜோதிட சங்கத்திற்குஎன பிரத்யேக ஜோதிட மென்பொருளை உருவாக்கி அறிமுகம் செய்யப்பட்டது. மேலும் ஜோதிடர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டது. இம்மாநாட்டில் மாநாட்டில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஜோதிடர்கள் பங்கேற்றனர். இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த சங்க மாநாட்டில் நலிவுற்ற ஜோதிடர்களுக்கு நல்வாழ்வு அளிக்க ஜோதிட நல வாரியம் அமைக்க வேண்டும், அனைத்து கலைக் கல்லூரிகளிலும் ஜோதிடத்தை ஒரு பாடமாக வைக்க வேண்டும், இந்து சம்பிரதாயங்களில் உள்ள அறிவியல் பூர்வ விளக்கங்களை ஆராய அதற்கான குழுவை அரசு சார்பில் அமைத்து அதை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்,

இந்து சமய அறநிலைய கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில் முறையாக ஜோதிடம் பயின்ற ஜோதிடர் ஒருவரை அரசு ஊழியராக நியமிக்க வேண்டும், தமிழ்நாட்டில் உள்ள புகழ்பெற்ற பரிகார ஸ்தலங்களில் பொதுமக்கள் பரிகாரம் செய்ய பரிகார மண்டபங்களை அரசு சார்பில் கட்ட வேண்டும், அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தின் கீழ் திருக்கோயிலுள்ள பாடசாலைகளில் பயில ஜோதிடர்களுக்கு தனி இட ஒதுக்கீடு தர வேண்டும்,

அரசு ஜோதிடத்தை ஒரு தொழிலாக அங்கீகரித்து முறையாக ஜோதிடம் பார்க்கும் ஜோதிடர்களுக்கு தொழில் பாதுகாப்பை வழங்க வேண்டும், இந்துக்களுக்கு ராமர் பிறந்த அயோதிக்கு வழிபடச் செல்ல இந்து அறநிலைய துறை வருவாயின் மூலம் இலவச பயணம் அல்லது அரசு மானியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அரசுக்கு கோரிக்கைகளாக வைக்கப்பட்டது.

இம்மாநாட்டில் தென்னிந்திய நிர்வாகத்தலைவர் சேலம் ரத்தினம், தென்னிந்திய ஒருங்கிணைப்பு தலைவர் கவுந்தபாடி சரவணன், தென்னிந்திய துணைத் தலைவர்கள் கவுந்தபாடி உதயகுமரகுருபரன், செட்டிபாளையம் பிரசன்ன ராஜா, நாமக்கல் மாவட்ட தலைவர் செந்தில் குமார் உள்பட தமிழ்நாடு மாநில நிர்வாகிகள், கேரள மாநில நிர்வாகிகள், ஆந்திர மாநில நிர்வாகிகள், கர்நாடகா மாநிலf நிர்வாகிகள் உள்ளிட்ட 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜோதிடர்கள் பங்கேற்றனர்.

## மதுராந்தகம் அருகே வெள்ளபுத்தூர் ஊராட்சியில் மத்திய அரசை கண்டித்து மகாத்மா காந்தி திருவுருவச்சிலை அலங்காரத் தேர் ஊர்வல அமைதி பேரணி



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள வெள்ள புத்தூர் ஊராட்சியில் முன்னாள் காஞ்சி பாராளுமன்ற உறுப்பினர் எம் பி விஸ்வநாதன் தலைமையில் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் மகாத்மா பெயரை மாற்றியதற்கு எதிர்ப்புதெரிவித்து கிராமத்தில் உள்ள 100க்கும் மேற்பட்ட பெண்களுடன் காந்தி பெயரை மீட்கும் போராட்டத்தில் காந்தி உருவ சிலைக்கு மாலை அணிவித்து பல்லக்குடன் சுமர்ந்து சென்று ஊர்வலமாக வந்தனர்

பிறகு காந்தி பெயரை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைத் தூண்களாகத் திகழும் மகாத்மா காந்தியின் கொள்கைகள் மற்றும் தத்துவங்களை மக்களிடையே மீண்டும் கொண்டு செல்வதே இந்தப் ஊர்வலத்தில் நோக்கம். அமெரிக்க முன்னாள் அதிபர் திரு. ஒபாமா, தென்னாப்பிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா, அமெரிக்கசிவில் உரிமை ஆர்வலர் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் போன்ற உலகத் தலைவர்கள் காந்தியத்தைப் போற்றி வரும் வேளையில், தற்போதைய மத்திய பாஜக அரசு, காந்தியக் கொள்கைகளைச் சிதைக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக, கிராமப்புற ஏழை மக்களின் வாழ்வாதாரமான 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்' (MGNREGA) பெயரிலிருந்து மகாத்மா காந்தியின் பெயரை நீக்கியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது. என கண்டன முழக்கமிட்டனர் இந்த நிகழ்ச்சியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தேசிய செயலாளர் தெலுங்கானா மாநில பொறுப்பாளர் திரு. பெ.விஸ்வநாதன் Ex MP., அவர்கள் வெள்ளப்புத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் வரதன் , துணைதலைவர் விஜயகுமார், முன்னால்

மாவட்ட தலைவர் வழக்கறிஞர் R.சுந்தரமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் அச்சரப்பாக்கம் தமிழ்செல்வன் , வேடந்தாங்கல் சதீஸ்குமார் மற்றும் வட்டார தலைவர் வழக்கறிஞர் அரிபிரசாத். உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் பெண்கள் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

## ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டில் 14வது மாதமாக ஆஞ்சநேயர் கோவில் சார்பில் 1500 பேருக்கு அன்னதானம்



ஈரோடு மாவட்டம் தாளவாடி தொட்டபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சேவா அறக்கட்டளை மற்றும் ஈரோடு தினசரி காய்கறி சந்தை நண்பர்கள் இணைந்து கடந்த இரண்டு வருடங்களாகத் தங்களது சேவையைத் தொடர்ந்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக ஈரோடு நேதாஜி காய்கறி சந்தையில் இரண்டாவது ஆண்டாக 14-வது மாதச் சிறப்பு அன்னதான நிகழ்வு நடைபெற்றது. ஏ.கே.என். வெஜிடபிள்ஸ் ஆறுமுகம் முன்னிலை வகித்த இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாகப் பவர் கனெக்ட் உரிமையாளர் பாலாஜி, அந்தியூர் சதீஷ், ஈரோடு ரவீந்திர குமார் மற்றும் கோவில் அறங்காவலர்கள், அன்னதான கமிட்டி நிர்வாகிகள், மகளிர் அணியினர் கலந்துகொண்டனர். விழாவில் 1500-க்கும் மேற்பட்ட குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் முதியோர்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஸ்ரீ ருத்ரஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சார்பாக ஈரோடு கொங்கலம்மன் கோவில் வீதியிலும் சுமார் 600 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இக்கோவில் நிர்வாகத்தின் தொடர் அன்னதான சேவையை அப்பகுதி மக்கள் பெரிதும் பாராட்டி வருகின்றனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.